C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 15 APRIL '2023 ஆகாரம் : 04



"அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்"

– லூக்கா:24:6

HE IS NOT HERE, BUT IS RISEN

- MATTHEW:4:2

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| SAT<br>6.30 PM<br>7.30 PM | CHILDREN'S BIBLE SCHOOL<br>ECC.CHURCH CENTER<br>MRS. AUGUSTA LAWRENCE @ 056 641 1676 |
| APR-3,4,5<br>07.30 PM | HOLY WEEK SPECIAL SERVICE<br>@ ZOOM |
| APR-06<br>THU<br>7.30 PM | MAUNDY THURSDAY SERVICE<br>@CHURCH MAIN HALL<br>CONTACT: THE PRESBYTER |
| APR-07<br>FRI<br>7.00 PM | GOOD FRIDAY SERVICE<br>@CHURCH MAIN HALL<br>CONTACT: THE PRESBYTER |
| APR-09<br>SUN<br>7.30 PM | EASTER SERVICE<br>@CHURCH MAIN HALL<br>CONTACT: THE PRESBYTER |
| APR-22<br>FRI<br>7.30 PM | CHURCH ANNIVERSARY & CONFIRMATION SERVICE<br>@CHURCH MAIN HALL<br>Rt.Rev.Dr.J. George Stephen-Bishop CSI Diocese of Madras<br>(Special Guest) |
| APR-29<br>SAT<br>7.30 PM | ANNUAL GENERAL BODY MEETING -2023<br>@CHURCH MAIN HALL<br>CONTACT: THE PRESBYTER |

# FROM THE PASTOR'S

# *Desk*

**அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்**

— லூக்கா:24:6

*He is not here, but is risen*

**-Luke:24:6**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் திருச்சபை குடும்பத்தார் அனைவருக்கும் உயிர்த்தெழுந்த திருநாள் வாழ்த்துக்கள்! ஸ்தோத்ரம்!!

## உயிர்த்தெழுதல்: இயேசுவின் வாழ்வைக் கொண்டாடுதல்

- உயிரோடெழுந்த இயேசுவைத் தேடிச்சென்று கொண்டாடுவோம். (லூக்கா:25:1—4)
- உயிரோடெழுந்த இயேசுவை உயிரோடிருப்பவராகக் கொண்டாடுவோம். (லூக்கா:24:5—6)
- உயிரோடு எழுந்த இயேசுவை நற்செய்தியாகக் கூறிக் கொண்டாடுவோம். (லூக்கா:24:7—12)

ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுதல் திருநாளை இப்படி பட்ட சிந்தனையில் கொண்டாட நம்மை அற்பணிக்க அழைக்கப்படுகிறோம்



**பரிசுத்த வாரம், சிறப்பு ஆராதனை - HOLY WEEK**

வருகின்ற ஏப்ரல்—3,4,5—2023 (திங்கள், செவ்வாய், புதன்) ஆகிய நாட்களில் மாலை:7:30 மணிக்கு ZOOM — வாயிலாக பரிசுத்த வாரம் ஆராதனை நடைபெறும்.

**வியாகுல வியாழன் பரிசுத்த திருவிருந்து ஆராதனை - MAUNDY THURSDAY**

வருகின்ற 6, ஏப்ரல் —2023 (வியாழன்) மாலை 7.30 மணிக்கு வியாகுல வியாழன் பரிசுத்த திருவிருந்து ஆராதனை நடைபெறும்.

**பெரிய வெள்ளி ஆராதனை - GOOD FRIDAY**

வருகின்ற 7,ஏப்ரல்—2023 (வெள்ளி) மாலை: 7:00 மணிக்கு பெரிய வெள்ளி சிலுவை தியானம் நடைபெறும்

**உயிர்த்தெழுந்த திருநாள் ஆராதனை - EASTER SERVICE**

வருகின்ற 9,ஏப்ரல்—2023 (ஞாயிற்றுக்கிழமை) மாலை:7.30மணிக்கு உயிர்த்தெழுந்த திருநாள் திருவிருந்து ஆராதனை நடைபெறும்.

மேற்குறிப்பிட்ட அனைத்து சிறப்பு ஆராதனையில் திருச்சபை குடும்பமாய் கலந்துக் கொள்ள அழைக்கப்படுகிறோம்.

**திருச்சபை நிறுவன நாள் மற்றும் திடப்படுத்தூதல் ஆராதனை CHURCH ANNIVERSARY & CONFIRMATION SERVICE**

வருகின்ற 22, ஏப்ரல் —2023 சனிக்கிழமை மாலை:7:30 மணிக்கு திருச்சபை நிறுவன நாள் மற்றும் திடப்படுத்தூதல் ஆராதனை RT.REV.DR.J. GEORGE STEPHEN. BISHOP CSI. DIOCESE OF MADRAS, அவர்களின் தலைமையில் நடைபெறும். அந்த நாளில் சிறப்பு விருந்தினராக பேராயரம்மா திருமதி.யமுனா ஜார்ஜ் ஸ்டீபன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள். அந்த நாளுக்காகவும் திடப்படுத்துதல் பெறும் அனைவருக்காகவும் ஜெபிக்குமாறும் அத்துடன் திருச்சபை குடும்பமாய் கலந்துக் கொள்ள அழைக்கப்படுகிறோம்

**வருடாந்திர பொது குழு கூடுகை - ANNUAL GENERAL BODY MEETING -2023**

வருகின்ற 29, ஏப்ரல் —2023 சனிக்கிழமை மாலை:7:30 மணிக்கு திருச்சபையின் வருடாந்திர பொது குழு கூடுகை— ANNUAL GENERAL BODY MEETING நடைபெறும் திருச்சபை குடும்பத்தினர் ஜெபிக்குமாறும் அத்துடன் குடும்பமாய் கலந்துக் கொள்ள அழைக்கப்படுகிறோம். தொடர்ந்து இந்த காலங்களில் நமது வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபைகளுக்காக, ஊழியர்களுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலைவாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்களின் கல்விக்காக அவர்களின் உயர் கல்விக்காக, அத்துடன் அவர்களின் ஆவிக்குரிய வாழ்விற்காக ஜெபிக்க அழைக்கபடுகிறோம். மேலும் நமது திருச்சபையின் அனைத்து திருப்பணிகளுக்காக, திருச்சபையின் அனைத்து குடும்பங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கும் மாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். இந்த வருகின்ற காலங்களில் புதிய தரிசனங்களுடன் எதிர்நோக்கவும், புதிய நண்மைகள், புதிய ஆசிர்வாதம் பெற்றுக்கொள்ள ஆண்டவர் நமக்கு துணை செய்வாராக

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக....

ஆண்டவரின் உன்னதப் பணியில் உங்கள் ஆயர்

*Rev.S.P.Baskar*



# சிலுவை: விடுதலையின் அடையாளம்

## Cross: Sign of Liberty

கிறிஸ்தவர்களின் அடையாளம் சிலுவை ஆகும். இந்த சிலுவையை குறித்து திருமறையில் பழைய ஏற்பாட்டில் சிலுவை என்ற வார்த்தை எங்கும் தொனிக்கவில்லை. புதிய ஏற்பாட்டில் 24 முறை சிலுவை என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. சிலுவை என்பதற்கு கிரேக்க மொழியில் STAUROO என்ற வார்த்தை குறிக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் மறைப்பொருளாக இருந்த சிலுவை புதிய ஏற்பாட்டில் வெளியரங்கமாக காட்சியளிக்கிறது. (THE CROSS WHICH IS ENFOLDED IN THE OLD TESTAMENT, IS UNFOLDED IN THE NEW TESTAMENT) பழைய ஏற்பாட்டு பக்தர்கள் விசுவாசத்துடன் முன்னோக்கி பார்த்த எதிர்பார்ப்பு. சிலுவையின் அடையாளம் பழைய ஏற்பாட்டில் எப்படியாய் தொனிக்கிறது என்றால்" உபாகமம்:21:22—23, யோசுவா:10:26 —ஆகிய வசனங்களில் சிலுவையை குறித்து சொல்லப்படுவதற்கு "மரம்" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது அல்லது குறிக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் ரோமர்கள் சிலுவை மரணத்தை எவ்வாறு அருவருப்பான மரணமாக கருதினார்கள் என்பதையும் யூதர்களை பொருத்தமட்டில் மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்க பட்டோர் என்றும் கருதினார்கள். (கலா:3:13) இறைமகன் இயேசு இந்த உலகில் வாழ்ந்த காலகட்டத்தில் பாலஸ்தீனம் ரோம பேரரசின் ஆதிக்கத்தில் இருந்தது. மரண தண்டனைப் பெற்ற கைதிகளை சிலுவையில் அடித்து கொல்வது பிரபலமான ரோம தண்டனையாக இருந்தது. சிலுவை மரணம் மிகவும் கொடுமையானது. ரோம குடியுரிமை உள்ள எவனும்

*"மரணத்திற்கு ஏதுவான தொன்றும் அவரிடத்தில் காணாதிருந்தும், அவரைக் கொலை செய்யும்படிக்குப் பிலாத்துவை வேண்டிக் கொண்டார்கள்.அவரைக் குறித்து எழுதி இருக்கிறவைகள் யாவையும் அவர்கள் நிறைவேற்றின பின்பு, அவரை மரத்திலிருந்து இறக்கி, கல்லறையிலே வைத்தார்கள்"*

*- அப்போஸ்தலர்:13:28,29*

சிலுவையில் அடிக்கப்படக் கூடாது என்று ரோம சட்டமே இருந்தது. ரோமர்களல்லாதவர்களை தான் சிலுவையில் அடிப்பது வழக்கமாக இருந்தது. இது இயேசுவின் சிலுவை மரணத்தின் வழியாக இயேசுவை சிலுவையில் கொலை செய்தார்கள் என்பதை சிலுவை நமக்கு வெளிப்படுத்துகிறது.

## எதிலிருந்து ஆண்டவர் நம்மை நீங்கலாக்கி விடுதலை தந்தார்

### > பாவத்திலிருந்து விடுதலை. (ரோமர்:6:23)

"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" ரோமர்:6:23. இந்த உலகிலே நாம் பாவிகளாய் இருக்கையில் நம்மை நீதிமான்களாக்கும்படி நம்முடைய பாவங்களுக்காக அவர் பாவமானார். அனைத்து குல மக்களின் பாவத்தை ஏற்றுக் கொண்டு பாவத்தை சுமந்தவராய் தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்து பாவமானார். நாம் பாவங்களுக்கு செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். (1பேதுரு:2:24). நம்முடைய பாவத்திற்கு செத்து நீதிக்கு பிழைத்திருக்கும் படி மரணம் நம்முடைய பாவத்திற்கு கூலி கொடுத்தால் மரணம் தான் கிடைக்கும். ஆனால் சிலுவை விடுதலையின் அடையாளமாக இருப்பதால் நம்முடைய பாவங்களுக்காக இயேசு கிறிஸ்து பாவியாக தன்னை ஒப்புக்கொடுத்ததால் நம்முடைய பாவங்களிலிருந்து விடுதலை பெற்று அவருடைய பிள்ளைகளாக வாழுகின்ற வாழ்வை நமக்கு கொடுத்திருக்கிறார். நம்முடைய பாவத்திற்கு விடுதலை இயேசுவின் சிலுவை மரணம் என்பது புரிந்துகொள்ள அழைக்கப்படுகிறோம்.

### > சாபத்திலிருந்து விடுதலை. (ஆதி:3:17)

பின்பு அவர் ஆதாமை நோக்கி; நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவி கொடுத்து, புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்த படியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடு அதின் பலனை புசிப்பாய். (ஆதி:3:17) ஆதி மனிதன் செய்த தவறின் நிமித்தம் சாபம் பூமியில் வந்தது ஏதேன் தோட்டத்தில் எந்த நாளில் பாவம் மனிதர் செய்தானோ அந்த நாளில் மனிதர் இறைவனிடமிருந்து பிரிக்கப்பட்டு சாபம் இந்த பூமியில் வந்தது. ஆனால் இயேசு கிறிஸ்து மனுமக்களின் பாவங்களை தானே ஏற்றுக் கொண்டு சாபமான சிலுவையில் பலியாய் தன்னை அர்ப்பணித்து மரித்தார். மானிட சாபத்தை

*"மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்களாக்கி மீட்டுக் கொண்டார்"*

*- கலாத்தியர்:3:13*

ஏற்றுக்கொண்டார். சாபத்திற்குள்ளாயிருந்த மானிடர்களைச் சாபத்திலிருந்து மீட்க சாப சிலுவையில் தாமே சாபமாகி சிலுவையின் வழியாக மனக்குளத்திற்கு சாபத்தில் இருந்து விடுதலை தந்தார். இன்றைக்கு நம்முடைய சாபங்களையும் நீக்கும் பொருட்டாக இயேசு கிறிஸ்து சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டார் என்பதை புரிந்துக் கொள்ள அழைக்கப்படுகிறோம்..

### › துரோகத்திலிருந்து விடுதலை (ரோமர்:5:19,20)

அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல, ஒருவனுடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.மேலும், மீறுதல் பெருகும் படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது; அப்படியிருந்தும், பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று.. (ரோமர்:5:19,20) அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகின்ற செய்தி என்னவெனில் குற்றம் செய்ய வாய்ப்புப் பெருகும்படி சட்டம் இடையில் நுழைந்தது; ஆனால் பாவம் பெருகிய இடத்தில் ஆண்டவரின் அருள் பொங்கி வழிந்தது. மோசேயின் காலத்தில் பத்து கட்டளை கொடுக்கப்பட்டது. இயேசுவின் காலத்தில் இரண்டு கட்டளைகள் கொடுக்கப்பட்டது ஆனால் அவற்றை மனித சமுதாயம் கடைப்பிடிக்கவில்லை என்பது கடவுளுக்கு எதிரான துரோகம். ஆனால் இயேசு கிறிஸ்து இந்த துரோகத்தில் இருந்து நம்மை நீங்கலாக்கி சிலுவையில் மரணத்தின் வழியாக நம்முடைய எல்லா அக்கிரமத்தையும் துரோகத்தையும் நீங்கலாக்கி நம்மை இரட்சித்து ஒரு புதிய விடுதலையின் வாழ்வை கொடுத்தார் என்பதை புரிந்துக் கொள்ள அழைக்கப்படுகிறோம்.

### நிறைவாக:

இன்றைக்கும் இந்த சிலுவை நமக்கு இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் வழியாக கொடுக்கிற அறைக்கூவல்

> *இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிரிஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின.*
> *- 2 கொரி:5:17*

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் வழியாக நாம் பெற்றிருக்கிற புதிய வாழ்வை, புதிய சிந்தனைகளோடு, புதிய அர்ப்பணிப்போடு, அவருடைய சிலுவையை நோக்கி பயணம் செய்ய அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

இறைபணியில் உங்கள் ஆயர்.


*Rev.S.P.Baskar*



# ஞானத்தை அறிவிக்கும் மகளிர்

ஆ

ஆண்டவர் மனுக்குலத்திற்கு அருளிய சிறப்பான அருட்கொடை ஞானம் ஆகும். பிற உயிர்களிடமிருந்து மனிதரை வேறுபடுத்திக் காட்டுவதே மனிதருக்கு ஆண்டவர் அருளிய பொக்கிஷமாம் ஞானம். மனிதர் சிந்தனைகளைச் செயல்வடிவமாக்கி நற்காரியங்கள் செய்ய தூண்டுவது ஞானம் ஆகும். ஞானம் என்ற சொல்லின் எபிரேய வார்த்தை "ஹாக்மா" (HAKMA) என்பதாகும். இந்த சொல் திருமறையில் பல பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. அப்சலோமை எருசலேமுக்கு மீண்டும் வரவழைக்கச் செய்ய தெக்கோவாவூர்ப் பெண்ணின் நடிப்பு ஞானத்தின் செயல்முறைக்கு ஒரு சிறந்த உதாரணம் (2 சாமுவேல்:14:1—23) கூர்மதியுடைய பெண்கள் ஞானிகளாக் கருதப்பட்டனர். ஒருவரின் வாழ்வை ஒழுக்கப்படுத்தும் திறனே ஞானம் எனலாம். ஆண்களைப் போன்று மகளிரும் ஞானத்தில் பல கோணங்களில் சிறப்பு பெற்று வாழ்ந்தனர். இவற்றைக் குறித்து சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.




**இறைஞானத்தால் இஸ்ரயேலில் போரை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவ தளபதி தெபோரா. —நியாயாதிபதிகள்:4:4**

> "அக்காலத்திலே லபிதோத்தின் மனைவியாகிய தெபொராள் என்னும் தீர்க்கதரிசியானவள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தாள்."
> —நியா:4:4

இஸ்ரயேல் மக்கள் கானானிய மன்னன் யாபினால் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டனர். அவனுடைய படைத்தலைவன் சீசரா அக்காலத்தில் இஸ்ரவேலருக்கு இறைவாக்கினரும், நீதித்தலைவியுமாயிருந்தவர் தான் இலப்பிதோத்தின் மனைவி "தெபொராள்" இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் இராஜாக்கள், இறைவாக்கினர்கள் இல்லாத காலத்தில் இஸ்ரயேல் மக்கள் பொல்லாப்பானவற்றைச் செய்து கடவுளுக்குக் கோபமூட்டினர். ஆகவே கானானிய அரசன் யாபினால் கடினமாக நடத்தப்பட்டனர்.

இவர்களுடைய கூக்குரல் கடவுள் சமூகத்தில் எட்டியது. ஆண்டவர் தெபோராளுக்கு ஞானத்தைக் கொடுக்கிறார். தெபொராள் பாராக்கை அழைத்து இஸ்ரயேலின் கடவுள் கட்டளையிடுகிறார். " நீ போய் நப்தலி, செபுலோன் மக்களைத் தாபோர் மலையில் ஒன்று கூட்டி அவர்களில் பத்தாயிரம் பேரைச் சேர்த்துக்கொள்ளும், யாபினின் படைத்தலைவன் சிசராவையும், அவன் தேர்களையும், படையையும் கீசோன் ஆற்றின் அருகே இழுத்து வந்து உன் கையில் கொடுப்பேன் என்று ஞான



இறைவாக்குரைத்தர் . பாராக் அதற்குப் பதிலாக நீர் என்னுடன் வந்தால் மட்டுமே செல்வேன் வராவிட்டால் நான் செல்ல மாட்டேன் என்றார். அதற்குத் தெபொராள் நான் உறுதியாக வருவேன். நீர் செல்லும் வழி உமக்குப் பெருமை தராது என்று திட்டவும் தெளிவுமாக கூறினாள். தெபோராளின் ஞான இறைவாக்கும்படி ஆண்டவர் சீசராவை "யாகேல்" என்ற பெண்ணிடம் ஒப்புக்கொடுத்தார். தெபோராள் ஞானத்தோடு செயல்பட்டதால் வாழ் விழுந்து கிடந்த இஸ்ரயேலின் சிற்றூர்கள் வாழ்வு பெற்றன. யுத்தச் சத்தம் வாசல் வரைக்கும் வந்த சூழலில் தெபோராள் மக்கள் அமைதியாக வாழும் நல்ல சூழலை உருவாக்கினார். அமைதியின் ஊடகமாய், ஆற்றல் மிகு தாயாய், பாழாய்ப் போன நகரங்களைக் கட்டி எழுப்பினார். இருளில் முழ்கி கிடந்த இஸ்ரயேரை ஒளிமயமான வாழ்வு வாழ வழிவகை செய்தார் என்பதை புரிந்து கொள்ள அழைக்கப்படுகிறோம்.

**நிறைவாக**

இன்றைக்கும் ஞானமுடைய பெண்கள் சமூகத்திலும், அரசியலிலும், குடும்பத்திலும், திருச்சபைகளிலும் நல்ல பங்களிப்பை கொடுத்து வருகிறார்கள். நாமும் அப்படி பட்ட பங்களிப்பை கொடுத்து அற்பணிப்புடன் வாழ அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக

ஆண்டவரின் உன்னதப் பணியில் உங்கள் ஆயரம்மா

*Mrs . E . Nancy Baskar*

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரர்களே உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் என் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

# "சிலுவையை சுமந்து கொண்டு"

—யோவான் 19:17

சிலுவை மரணம் என்பது ஒரு தண்டனை மரணம். கொலைகாரர்களுக்கும், கொள்ளைக்காரர்களுக்கும், தேச துரோகிகளுக்கும் கொடுக்கப்படும் தண்டனை அது. ஒரு குற்றமும் செய்யாத கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, அதை தனக்குரிய தண்டனையாய் ஏற்றுக்கொண்டு, தம்முடைய சிலுவையை சுமந்தார். உண்மையாக அது நம்முடைய சிலுவை.


## சிலுவையின் உருவத்தில் அவர் சுமந்தது என்ன?

### 1.நம்முடைய பாவத்தை சுமந்தார். (1பேதுரு 2:24)

“அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்.”

### 2.நம்முடைய பாடுகளை சுமந்தார். (ஏசாயா 53:4)

“மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்.”




### 3.நமக்குரிய பரிகாரத்தை சுமந்தார். (எபேசியர் 3:14–15)

“ அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து பகையைச் சிலுவையினால் கொன்று தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.”

மாபெரும் விலையாக, நம்மை மீட்கும் பொருளாக தம்முடைய ஜீவனையே இயேசு கிறிஸ்து நமக்காக கொடுத்தார் (மாற். 10:45). இஸ்ரவேலிலே வாதை நிறுத்தப்பட விலைகொடுக்க வேண்டியதாயிருந்தது. நம்மேலிருந்த கோபாக்கினை மாற்றப்பட தேவகுமாரன் தன்னையே பதில் விலையாக கொடுத்தார்.

நாம் பெற்ற இரட்சிப்பு இலவசமானாலும் அதை நமக்கு சம்பாதித்து கொடுக்கும்படி மாபெரும் விலை சிலுவையில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.
நம்மை மீட்க தன்னையே பலியாக கொடுத்த கிறிஸ்து இயேசுவை, நமக்காய் சிலுவை சுமந்த இரட்சகரை நினைவுகூர்ந்து
பிதாவாகிய தேவனை தொழுதுகொள்வோம்!
ஆமென்.

ARTICLE BY

MEN'S FLLOWSHIP



# ஹெலன் ரோசெவேரே

Article by

SIS. RADHIKA SELVAKUMAR

இது காங்கோ மருத்துவரின் மிகவும் வியத்தகு, இதயத்தை உடைக்கும் கதை. வடகிழக்கு காங்கோவில் உள்ள தனிமைப்படுத்தப்பட்ட பணி நிலையத்தில் ஆபத்தில் DR. ROSEVAERE மற்றும் அவரது சகாக்கள் அனைத்து முரண்பாடுகளுக்கும் எதிராக தங்கள் வேலையை பராமரித்தனர். அந்த முரண்பாடுகளில் தனிப்பட்ட தாக்குதல், சக ஊழியர்களின் மரணம் மற்றும் மிருகத்தனத்தின் நிலையான பயம் ஆகியவை அடங்கும். ஆனால் கதையின் மூலம் உள் அமைதியின் ஒளி பிரகாசிக்கிறது, இது கடவுளுடன் வாழ்வதில் தனிப்பட்ட நம்பிக்கை மற்றும் நற்செய்தியின் சக்தி. இது மிஷனரி அதிசயத்தின் கதை மட்டுமல்ல,மரண பயத்திலிருந்தும், மரணத்தை விட மோசமான பயத்திலிருந்தும் ஒரு ஆன்மாவின் விடுதலைக்கான சாட்சியாகும்.

கேம்பிரிட்ஜில் மருத்துவத்தில் முனைவர் பட்டம் பெற்ற பிறகு, ஹெலன் கிரிஸ்டல் பேலஸில் உள்ள உலகளாவிய சுவிசேஷம் சிலுவைப்போர் கல்லூரியில் ஆறு மாதங்கள் படித்தார். அங்கிருந்து காங்கோவில் மருத்துவ மிஷனரியாக நியமிக்கப்படுவதற்குத் தயாராகி, *1953* மார்ச் நடுப்பகுதியில், *28* வயதில், காங்கோவின் வடகிழக்கு பகுதிக்கு வந்தடைந்தார்.

முதல் இரண்டு ஆண்டுகளில், அவர் செவிலியர்களுக்கான பயிற்சிப் பள்ளியை நிறுவினார், பெண்களுக்கு செவிலியர்-சுவிசேஷகர்களாக பணியாற்ற பயிற்சி அளித்தார், அவர்கள் வெவ்வேறு பிராந்தியங்களில் கிளினிக்குகள் மற்றும் மருந்தகங்களை நடத்துவார்கள்.



பிறப்பு : *1925*

இடம் : இங்கிலாந்து

படித்தது : கேம்பிரிட்ஜ்

தொழில்: மருத்துவர்

மிஷனரி பணித்தளம் : காங்கோ

மறைவு : டிசம்பர் *7*, *2016*

காங்கோ 1960 இல் பெல்ஜியத்திலிருந்து சுதந்திரமடைந்தது, 1964 இல் உள்நாட்டுப் போர் வெடித்தது. அவர்கள் நிறுவிய மருத்துவ வசதிகள் அனைத்தும் அழிக்கப்பட்டன. கிளர்ச்சிப் படைகளால் பல வாரங்களாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட பத்து புராட்டஸ்டன்ட் மிஷனரிகளில் ஹெலனும் ஒருவர்அவளை சிறைபிடித்தவர்கள், "மிருகத்தனமான மற்றும் குடிபோதையில் இருந்தனர். அவர்கள் சபித்தனர் மற்றும் சத்தியம் செய்தனர், அவர்கள் தாக்கினர் மற்றும் உதைத்தனர்,அக்டோபர் 29, 1964 அன்று, ஹெலன் ரோஸ்வேர் கொடூரமாக கற்பழிக்கப்பட்டார். பலாத்காரத்தின் கொடூரமான இதயத்தை உடைக்கும் அனுபவத்தின் மூலம், கடவுள் என்னை அன்பின் நீட்டிய கரங்களுடன் சந்தித்தார். பிலிப்பியர் 4:19 , “என் தேவன் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தின்படி கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்வார்” என்பது எல்லா நிலைகளிலும் உண்மை என்பதை நான் அறிந்தேன், ஹெலனின் ஊழியத்தில் இந்த “சிறப்புரிமை” என்ற கருப்பொருள் முக்கியத்துவம் பெற்றது. அவரது அர்பானா '76 முகவரியில் , அவர் கூறினார்: ஒரு வார்த்தை நம்பமுடியாத அளவிற்கு தெளிவாகியது, அந்த வார்த்தை பாக்கியம். அவர் வலியையோ கொடுமையையோ அவமானத்தையோ போக்கவில்லை. இல்லை! எல்லாம் இருந்தது, ஆனால் இப்போது அது முற்றிலும் வேறுபட்டது. அது அவருடையது, அவருக்காக, அவரில் இருந்தது . அவர் உண்மையில் எனக்கு அவரது துன்பத்தின் தோழமையின் விளிம்பில் கொஞ்சம் கொஞ்சமாக பகிர்ந்து கொள்ளும் விலைமதிப்பற்ற பாக்கியத்தை வழங்கினார். அதைத் தொடர்ந்து வந்த சிறைவாசத்தின் வாரங்களிலும், தொடர்ந்து சேவை செய்த வருடங்களிலும், திரும்பிப் பார்க்கையில், ஒருவர் "செலவை எண்ணி" முயற்சித்திருக்கிறார், ஆனால் அதையெல்லாம் சலுகையில் விழுங்குவதை நான் காண்கிறேன். சிறப்புரிமையின் மகத்துவம் மற்றும் நிரந்தரத்தன்மை ஆகியவற்றில் செலவு திடீரென்று மிகவும் சிறியதாகவும் நிலையற்றதாகவும் தோன்றுகிறது. 1973 இல், ஹெலன் உடல்நலக் காரணங்களுக்காக UK திரும்பினார், பல புத்தகங்களை எழுதினார், மிஷனரி வழக்கறிஞராக பணியாற்றினார். டிசம்பர் 7, 2016 அன்று, தனது 91வது வயதில், துன்பப்படுவதை ஒரு பாக்கியமாக எண்ணிய தன் இறைவனுடன் இருக்கச் சென்றாள்.




# பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து

இயேசு கிறிஸ்து எங்கே இவ்விதமாக நாய்க்குட்டிகள் என்பதாக குறிப்பிட்டு பேசுவது கடினமாக காணப்படுவதைப் போல இருக்கிறது. ஆனால் இந்த இடத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யூத வழக்கத்தின் முறையை வெளிப்படுத்துகிறார். ஆனால் அவளுடைய பதிலை பாருங்கள்: அதற்கு அவள் மெய்தான் ஆண்டவரே ஆகிலும் நாய் குட்டிகள் தங்கள் எஜமானர்களின் மேசையிலிருந்து விழும் துணிக்கைகளை தின்னுமே என்றாள்.

எங்களுக்கும் அதில் ஒரு பங்கு இதில் இருக்கிறது என்பதைக் குறித்து அவள் தாமே பேசுவதை பார்க்கிறோம். நம்முடைய வாழ்க்கையில் நமக்கு எதிரிடையாக சூழ்நிலைகள் இருந்தாலும், நாம் நம்மை தாழ்த்தி கொள்வோம். நம்முடைய உண்மை நிலையை ஒத்துக்கொள்வோம்.

அது எப்பொழுதும் தவறு இல்லை. இந்த ஸ்திரீயானவள் அந்த காரியத்தை சொன்னபொழுது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவளைக் குறித்து சொல்லுகிறதை நாம் பார்க்கிறோம். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமடைந்தாள். என்ன ஒரு ஆச்சரியமான காரியம்.



> "அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார்"
>
> —மத்தேயு 15:26

இங்கு இடத்தில் இரட்டிப்பான ஆசீர்வாதத்தை பார்க்கிறோம். அவளுடைய விசுவாசம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் அவளுடைய மகளும் சுகம் பெற்றாள்.

நம்முடைய வாழ்க்கையில் எப்பொழுதும் காரியங்கள் உடனடியாக நடைபெற வில்லையே என்று நாம் அனேக நேரங்களில் சோர்ந்து விடுகிறோம். ஆனால் நாம் விசுவாசிக்கிற ஆண்டவர் எவ்வளவு உன்னதமானவர் என்பதை இந்த ஸ்திரீயின் மூலமாக வெளிப்படுத்துகிறதை நாம் பார்க்கிறோம்.

கர்த்தருக்கு நம்மை ஒப்புக்கொடுப்போம். அவர் நம்மை அருமையான பாதையில் நம்மை வழி நடத்துவார்.

YOUTH FELLOWSHIP

# MARCH WINNERS

## Find the way

- Patricia
- Jania Preni
- Johan Sanjo
- Kariss Angelo
- Chris Gabriel
- Bernicia
- Jessica

## Word Search

- Johan Sanjo
- Jaaon Eric
- Kariss Angelo
- Patricia
- Jessica
- Sherin Shah

## Kids Colouring

- Bernicia
- Jania Preni
- Smyrna Syntyche
- Jessica
- Kariss Angelo
- Chris Gabriel
- Patricia

Well Done!

## Cross Word

- Jason Eric
- Sherin Shah
- Johan Sanjo

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject: Your name / Quiz, type / Month – Year**

**To Church Email: csitcalain@gmail.com**

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# EXODUS: 21-30

# யாத்திராகமம்: 21-30

APRIL '23 - QUESTIONS

*1. எத்தனை ஆண்டுகள் உயிரோடிருந்தால் பழிவாங்க அவசியம் இல்லை?*

*2. யாரை உயிரோடு வைக்க வேண்டாம்?*



*3. எத்தனை வருடம் பலனைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்?*

*4. எத்தனை வருடம் மோசே மலையின் மீது இருந்தார்?*

*5. பொன்னினால் எத்தனை கேருபீன்கள் செய்ய வேண்டும்?*

*6. வாசஸ்தலத்தின் மேற்புறத்தில் எத்தனை பலகைகள் இருக்க வேண்டும்?*

*7. பலிபீடத்திற்கு சீத்திம் மரத்தால் தண்டுகள் உண்டு பண்ணி எதனால் மூட வேண்டும்?*

*8. ஆரோனுடைய குமாரருக்கு மகிமை உண்டாக என்ன செய்ய வேண்டும்?*

*9. எத்தனை நாள் பலிபீடத்திற்கு பிராயசித்தம் செய்ய வேண்டும்?*




*10. எது கர்த்தருக்கென்று பரிசுத்தமாய் இருக்கும்?*

## மார்ச் - 2023-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. யாத்: 11:6 | 2. யாத்: 12:37 | 3. யாத்: 13:20 | 4. யாத்: 14:29 | 5. யாத்: 15:15

6. யாத்: 16:9 | 7. யாத்: 17:6 | 8. யாத்: 18:17 | 9. யாத்: 19:1 | 10. யாத்: 20:21

திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ரோஸ்லின் பாலாஜி, திருமதி.பிப்லின் நெல்சன், திருமதி.ஜெயின் ராஜவேல்,

செல்வி.அஜின்ஷா, செல்வி.ஷெரின்ஷா, *DR.* சுவிட்லின் அபி, திருமதி.பமிலா ரேச்சல் டேனியல், திருமதி. ஜெயந்த ஜான்

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.


Your Name / Bible Quiz / MAR'23 / Send to: csitcalain@gmail.com

056 766 8348

Name:

Date:

# Kids Coloring




Find the Way

Name : ..........................................................................

# EASTER

HELP THE DOVE GET TO THE CROSS



# EASTER

## WORD SEARCH

Find the words listed below


```
                                 P I E R C E D S
                                 I A S L R U R P
                                 E C S A S A T K
                                 C N E S C I B L
                                 E P D W O R N B
                                 S N Q F Z V I Y
                                 O O S L S O E F
K Z O U K H J R C Y J F I N E H Y K R I E K A U Q H T R A E
D R O B E Q B T J T O S T D O Y U V X X C L Z S E V E I H T
E T H R E E D A Y S S I C L K F I H O V I E J C F A G W A N
A P O S T L E S S D E L E O U L G N O I X I F I C U R C N U
T N J T N Y Q V Y C P V R T I C R O W N O F T H O R N S T V
H I G H P R I E S T H E R F V G J U D A S I S C A R I O T I
                                 R U V B C Y L U
                                 R S K P S T P C
                                 B E T R A Y A L
                                 Q R T Q O S E F
                                 T D V S N X N G
                                 F O R A A H E O
                                 N B M I K E R L
                                 V O O B I B Y G
                                 R P V I N W C O
                                 Q D R T G V F T
                                 D M J J C F O H
                                 B L O O D E N A
                                 C B X V L S O J
                                 I S G P L E M E
                                 S R M I T T I S
                                 A E A A X S S U
                                 T N L V T H Y S
                                 P I G O C R S C
                                 P U N E A V R H
                                 D E U V L O E R
                                 M A L N G S I I
                                 T A R A C C D S
                                 C I R K M M L T
                                 V R Z Y N B O Y
                                 R Y O R E E S G
                                 K I C S Y D S G
                                 P N H N S Q E S
```


ANGELS
APOSTLES
BETRAYAL
BLOOD
CALVARY
CROSS
CROWN OF THORNS
CRUCIFIXION
DARKNESS
DEATH
EARTHQUAKE
EASTER
GOLGOTHA
HIGH PRIEST
JESUS CHRIST
JOSEPH
JUDAS ISCARIOT
KING
LAMB


MARY
NAILS
PASSOVER
PIECES OF SILVER
PIERCED
PILATE
RESURRECTION
ROBE
ROMANS
SACRIFICE
SIMON OF CYRENE
SOLDIERS
SON OF GOD
SPEAR
STONE
TEMPLE
THIEVES
THREE DAYS
TOMB

# CROSS WORDS

**Name :** ......................................................................









**Word List:**

bread cross
sacrifice love
stone hosanna
empty risen
slept thorns



**Across**

1. Taking this during the last supper symbolized Jesus' body.
4. Jesus was forced to wear a crown made of these instead of a crown meant for a real king.
7. The angel told the women, "Don't be afraid, Jesus isn't here; He has ____!
8. Instead of praying the disciples did this when Jesus went off to pray by himself.
9. The main reason that God gave His only son, Jesus to die for each of us.

**Down**

2. On Sunday the two Mary's didn't find Jesus but a tomb that was ____.
3. The word people shouted to Jesus that means blessed is He who comes in the name of the Lo
5. Jesus became the ____ for us, so we could be forgiven for our sins.
6. Jesus was meant to die on this.
8. This was put in front of the tomb so nobody could steal Jesus' body.

# APRIL

| | |
|---|---|
| 01-APR | Mrs. Olivia Sherin |
| 02-APR | Mr. Blessin Paul |
| 02-APR | Baby. Aaliya B. Babina D/o Mr. Babu Abraham |
| 03-APR | Mr. Alvin Kumar Asirmanns |
| 03-APR | Mastr. Alan Manis S/o Mr. Alvin Kumar Asirmanns |
| 04-APR | Mastr. Regan Shan S/o Mr. Balaji Ramaiyan |
| 06-APR | Mr. Herchil Harish |
| 09-APR | Mr. A. Yobu |
| 09-APR | Dr. Pradeev Raj |
| 10-APR | Mr. Ghilton Raj. S |
| 11-APR | Mr. Stalin Jose .A |
| 11-APR | Mrs. K.Santhiya |
| 14-APR | Mrs. Angel |
| 16-APR | Mrs. Vimala Nicson |
| 17-APR | Mrs. Shelly Kurian |
| 17-APR | Ms. Diniya Sunshine |

*Wish you many more happy returns of the day God bless you all*

# APRIL

| | |
|---|---|
| 20-APR | Mrs. Catherine Judith Franklin |
| 21-APR | Mr. Babu Abraham |
| 22-APR | Mrs. Sathiya Mary |
| 24-APR | Mrs. D.Mercylin Latha |
| 27-APR | Mr. Salomon Livingston |
| 28-APR | Mr. Santhosh Kumar.M |
| 29-APR | Mr. Daniel Durai Singh |
| 30-APR | Mrs. Thangam.G |
| 30-APR | Baby. Sherin Shah D/o Mr. Selvistor Solomon |

## APRIL *Wedding* ANNIVERSARY

**05-APR** Mr. Kingsly Stoobert & Mrs. Salini Vimala Koshy

**10-APR** Mr. Bhaskar Rajaram & Mrs. Angelin Nalini

**13-APR** Mr. Sunith Samuel & Mrs. Shiby Angel

**16-APR** Mr. Glymond Fenzer & Mrs. Sweetlin Abi

**19-APR** Mr. Nelson Sopitha Raj & Mrs. Biblin Christabel

**26-APR** Mr. Melbin Paul & Mrs. Shaly Jesie








# VBS-2023












# VBS-Picnic



































PRIMAR




VBS - 2023
SPECIAL SERVICE
BIBLE READING
மத்தேயு 5 : 1-10




INTERMEDIAT




SENIOR


PRIMAR

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

# CHURCH

## ANNIVERSARY & CONFIRMATION

*Service*



Guest speaker

**RT.REV.DR.J. GEORGE STEPHEN**

Bishop, CSI.Diocese of Madras

**APRIL | 22nd | 2023**

Evangelical Church Campus Main Hall

Al Ain UAE



# Good Friday

April 07,2023

*For Christ also suffered once for sins, the righteous for the unrighteous, to bring you to God. He was put to death in the body but made alive in the Spirit.*


**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**



**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**